**IN THE COURT OF SPECIAL COURT FOR**
**TRIAL OF CASES UNDER SC/ST (POA) ACT, TIRUVANNAMALAI.**
**SPECIAL SESSIONS CASE NO. 17 OF 2025**
**Deposition of Witness for : PW-4 (LW-4)**

| | | |
|---|---|---|
| **Name** | : | திரு.குணா |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 31-07-2026**

Accused present.

**முதல் விசாரணை –**

நான் பெரணமல்லூரில் குடியிருக்கிறேன் . நான் TNPSC exam எழுத படித்துக்கொண்டிருக்கிறேன். கடந்த 2025 ம் வருடம் 16 ம் தேதி ஜனவரி மாதம் 6.00 மணியிலிருந்து 9.00 மணிவரை கேம்ஸ் நடத்தினோம் . வீல்சேர், டேன்சிங்க கேம் ஆகியவற்றை குழந்தைகளுடன் நடத்தினோம் . ஆஜர் எதிரியின் வீடு எங்கள் வீட்டிலிருந்து மூன்று வீடு தள்ளி உள்ளது . ஆஜர் எங்கள் வீட்டிற்கு வந்து கேட்டார் . சத்தமாக இருக்கிறது ஸ்பீக்கரை ஆப் பண்ணுங்கள் என்று சொன்னார் . நாங்களும் ஆப் பண்ணிவிட்டோம் . அதன் பிறகும் தெருவில் நாங்கள் எப்படி வாழ்வது , இது ரெஸ்டாரண்டா பணம் இருந்தால் டெசர்ட்டில் போய் ஆடவேண்டியதுதானே என்று சொன்னார் . அவர் டிரிங்ஸ் சாப்பிட்டிருந்தார் . செட்டை ஆப் செய்துவிட்டோம் போங்கள் அண்ணா என்று சொன்னதற்கும் அவர் பேசிக்கொண்டே இருந்தார் .

என்னுடைய அம்மா அக்கா எல்லோரும் வந்து தெரியாதவர்கள் போல் பேசுகிறாயே செட்டைதான் ஆப் பண்ணிவிட்டோமே போ தம்பி என்று சொன்னார்கள் . பின்பு அவர் பேச,நாங்கள் பேச சண்டையாகிவிட்டது . தெருவில் உள்ளவர்கள் எல்லோரும் பார்த்தார்கள். ஆஜர் எதிரியின் மனைவியும் ,அம்மாவும் வந்து பேசினார்கள் . இவங்ககிட்ட என்ன பேச்சு பத்து நிமிடத்தில் என்னுடைய பவரை காட்டுகிறேன் என்று ஆஜர் எதிரி சொன்னார் . பொண்ணுங்களை ஆடவிட்டு அவங்க அப்பா மேலே படுத்துக்கொண்டிருப்பான் என்று தரகுறைவாக பேசினார்கள். எங்களுடைய ஆதங்கம் தாங்காமல் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம் . இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.E படித்துள்ளேன். எங்களுக்குள் கேம்ஸ் நடத்தியது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டதை உடனடியாக காவல் நிலையத்திற்கு அன்று இரவே தெரிவித்தோமா என்றால் இரவு 10.30 மணிக்கு தெரிவித்தோம். என்ன நடந்தது என்பதை எழுதி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகாரை நான் எழுதினேனா என்றால் இல்லை, என்னுடைய அப்பா எழுதினார். என்னுடைய அப்பா சார் பதிவாளராக இருந்து பணி ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான் . அன்றைய தினம் இரவே போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து எங்களை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அன்று இரவே என்னுடைய அம்மாதான் புகார் கொடுத்தார் . அப்பா, அம்மா புகார் கொடுத்ததற்கு பின்பு நானோ , சகோதரியோ, அம்மா, அப்பாவோ வேறு எதாவது புகார் கொடுத்தோமா என்றால் இல்லை . மாலை 6.00 மணியிலிருந்து இரவு 9.00 மணிவரை மியூசிகல் சேர் , பேன்சி கேம் நடந்துக்கொண்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி கேம்ஸ் பீக்கர் வைத்துதான் நடத்திக்கொண்டிருந்தோம் என்றால் சரிதான். மேற்படி சத்தம் அருகில் உள்ளவர்களுக்கும் எதிரியின் வீட்டிற்கும் கேட்கும் என்றால் இல்லை. எதிரி 9.00 மணிக்கு மேல்தான் சத்தமாக இருக்கிறது, நிறுத்துங்கள் அல்லது குறைத்து வையுங்கள் என்று சொன்னார் என்றால் 8.45 மணிக்கு சொன்னார். 8.45 மணிக்கு முன்பாக யாரும் எங்கள் வீட்டிடம் வந்து எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் வசிக்கும் தெருவில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் சுமார் 40, 50 வீடுகள். அனைத்து இனத்தை சார்ந்தவர்களும் அங்கு ஒற்றுமையாகதான்

வசித்து வருகிறோம் என்றால் சரிதான் . எங்கள் வீட்டிற்கு வலதுபுறம் , இடதுபுறத்தில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் வலதுபுறம் நான்கு வீடு ,இடதுபுறம் பத்து வீடுகள் எதிர்திசையில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் சுமார் இருபது வீடுகள் . எதிரியின் வீடு எங்கள் வீட்டிலிருந்து எத்தனை வீடு தள்ளி உள்ளது என்றால் நான்குவீடு . 16.01.2025 க்கு முன்பாக எதிரிக்கும் எங்களுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை , நன்றாக பேசிக்கொண்டிருந்தோம் என்றால் பிரச்சனை எதுவும் இல்லை ஆனால் பேசிக்கொள்ள மாட்டோம். சம்பவம் நடந்ததாக சொல்லும் 16.01.2025 இரவு விசாரித்ததற்கு பின்பு என்னையோ , என் சகோதரியையோ பெற்றோர்களையோ போலிசார் விசாரித்தார்களா என்றால் 17 ம் தேதியும் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். 17 ம் தேதி காவல் நிலையத்தில் யார் என்னை விசாரித்தார்கள் என்றால் கோவிந்தராஜ் என்ற எஸ்ஐ . அப்போது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை 10.30 மணி. அதன் பின்பு வேறு யார் எங்களை விசாரித்தார்கள் என்றால் நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மகளிர் காவல் நிலையத்திற்கு போவோம் என்று சொன்னோம், அதன் பின்புதான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தார்கள் என்றால் சரிதான். நான் போலிஸ் விசாரணையில் இது ரெஸ்டாரண்டா பணம் இருந்தால் டெசர்ட்டில் போய் ஆடவேண்டியதுதானே என்று சொன்னார் என்றும் , அவர் டிரிங்ஸ் சாப்பிட்டிருந்தார். செட்டை ஆப் செய்துவிட்டோம் போங்கள் அண்ணா என்று சொன்னதற்கும் அவர் பேசிக்கொண்டே இருந்தார் என்றும் என்னுடைய அம்மா அக்கா எல்லோரும் வந்து தெரியாதவர்கள் போல் பேசுகிறாயே செட்டைதான் ஆப் பண்ணிவிட்டோமே போ தம்பி என்று சொன்னார்கள் என்றும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் . அக்கம் பக்கம் உள்ளவர்கள் விவசாய வேலை செய்பவர்கள் என்றால் சரிதான் . ஆஜர் எதிரியின் பெற்றோரும் விவசாய வேலை செய்பவர்கள் என்றால் சரிதான் . விவசாய வேலை செய்பவர்கள் மாலை 7.00 –8.00 மணிக்கெல்லாம் வீட்டிற்கு போய் சாப்பிட்டு தூங்கிவிடுவார்கள் என்றால் சரிதான் . ஆஜர் எதிரி காவல் துறையில் பணிபுரிகிறார் என்றால் சரிதான் . அவர் வேலை முடித்து 8.00, 8.30 மணிக்குதான் வீட்டிற்கு வந்தார் என்றால் லீவில் வந்திருந்தார் . ஆஜர் எதிரி சத்தத்தை குறைத்து வைத்து கொண்டாடுங்கள் என்றுதான் கேட்டுக்கொண்டார் என்றால் இல்லை . என்னுடைய சகோதரி ஷாலினியின் கணவர் என்ன வேலை

செய்கிறார் என்றால் ராணுவத்தில் பணிபுரிகிறார். பொங்கல் கொண்டாட்டத்தில் ஸ்பீக்கர் வைத்து சத்தமாக இருந்ததால் அந்த தெருவில் உள்ளவர்கள் சொல்லி ஆஜர் எதிரி சத்தத்தை குறையுங்கள் என்று சொன்னதற்காக எதிரியின் மீது ஒரு பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அன்று இரவு காவல் நிலையத்தில் போலிசார் சத்தத்தை குறைத்து வைத்து கொண்டாடுங்கள் என்று எங்களிடம் சொன்னார்களா என்றால் இல்லை. நான் சொன்னதுபோலவும் புகாரில் சொல்லியுள்ளதுபோலவும் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல . முதல் விசாரணையில் பொய்யான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை

Deposition of Witness recorded in computer under my dictation to Typist in Open court and read over to the witness and acknowledged by him /her as correct.

V SUTHA Digitally signed by V SUTHA Date: 2026.08.01 17:59:52 +0530

**SESSIONS JUDGE,**
**SPECIAL COURT FOR TRIAL**
**OF CASES UNDER SC/ST (POA) ACT**
**TIRUVANNAMALAI.**

**IN THE COURT OF SPECIAL COURT FOR**
**TRIAL OF CASES UNDER SC/ST (POA) ACT, TIRUVANNAMALAI.**
**SPECIAL SESSIONS CASE NO. 17 OF 2025**
**Deposition of Witness for : PW-5 (LW-5)**

| | | |
|---|---|---|
| **Name** | : | திருமதி.ரேணுகா |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 31-07-2026**

Accused present.

**முதல் விசாரணை –**

நான் பெரணமல்லூரில் குடியிருக்கிறேன். மீன் வியாபாரம் செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி ஸ்பீக்கர் சத்தம் அதிகமாக இருப்பதாக வந்து கேட்டதாக கேள்விப்பட்டோம். நான் அங்கு இல்லை. போலிசார் வந்து என் பெயரை கேட்டார்கள் சொன்னேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை, பெயர் மட்டும் கேட்டார்கள்.

**சாட்சி போலிஸ் விசாரணையில் கூறியதில் இருந்து முற்றிலும் மாறுபட்டு சாட்சியம் அளிப்பதால் அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

நான் போலிஸ் விசாரணையில் 16.01.2025 ம் தேதி பொங்கல் பண்டிகை கொண்டாட வேண்டி சின்னதுரையின் மகள் ஷாலினி அவரது குழந்தைகளுடன் சின்னதுரை வீட்டிற்கு வந்ததிருந்தார் என்றும் இரவு 9.00 மணியளவில் ஷாலினியின் குழந்தைகளும், எங்கள் குழந்தைகளும் அந்த தெருவில் உள்ள குழந்தைகளும் சின்னதுரை வீட்டிடம் மியூசிகல் சேர் விளையாடிக்கொண்டிருந்தார்கள் என்றால் விளையாடிவிட்டு வந்துவிட்டோம் அதன் பின்பு என்ன நடந்தது என்று தெரியாது . குழந்தைகள் சத்தம்போட்டு விளையாடிக்கொண்டிருந்தபொழுது அதே தெருவில் வசித்துவரும் இந்து வன்னியர் ஜாதியை சேர்ந்த தேவராஜ் மகன் சுரேஷ் என்பவர் தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரிபவர் சின்னதுரை வீட்டிடம் வந்து அலமேலு குடும்பத்தை பார்த்து தெவிடியாங்களா ஏன்டி இவ்வளவு சத்தம் போடுரீங்க லாட்ஜிக்கு போங்கடி நாய்ங்களா என்று அசிங்கமாக திட்டினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் அந்த இடத்தில் இல்லை. மேலும் நான் போலிசில் வேலை செய்கிறேன், உங்கள் மீது பிராத்தல் கேஸ் போட்டுவிடுவேன் என்று மிரட்டினார் என்றும் அப்போது நானும் எனது கணவர் சரவணன் மற்றும் ஜெயா எல்லோரும் சுரேஷை பார்த்து குழந்தைகள் ஜாலியாக விளையாடிக்கொண்டிருக்கிறாகள் இதுக்குபோய் இப்படி அசிங்கமா பேசுறியே போப்பா என்று சொல்லி அனுப்பி வைத்தோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் அங்கு இல்லை . பின்பு சுரேஷ் வீட்டிற்கு போய்விட்டார் என்றும் சுரேஷின் மீது நடவடிக்கை எடுக்கும்படி அலமேலு என்பவர் புகார் கொடுத்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் மறுநாள் வந்து என்னுடைய பெயரை மட்டும்தான் கேட்டார்கள். போலிஸ் விசாரித்தபொழுது நடந்த சம்பவங்களை சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் இல்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

பொதுவாக எங்கள் தெருவில் வசிக்கும் விவசாய வேலை செய்பவர்கள் இரவு 8.00 மணிக்கெல்லாம் சாப்பிட்டு தூங்கிவிடுவார்கள் என்றால் இல்லை , எங்கள் தெருவில் உள்ளவர்கள் பத்து மணி வரை முழித்திருப்பார்கள், அன்றைய தினம் காணும் பொங்கல். அவர்களுக்குள் என்ன பேச்சுவார்த்தை நடந்தது என்று எனக்கு நேரடியாக

தெரியாது என்றால் சரிதான் . போலிசார் என்னை விசாரித்தபொழுது என்ன நடந்தது என்று தெரியாது என்றுதான் சொன்னேன் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

Deposition of Witness recorded in computer under my dictation to Typist in Open court and read over to the witness and acknowledged by him /her as correct.

V SUTHA Digitally signed by V SUTHA Date: 2026.08.01 17:59:59 +0530

**SESSIONS JUDGE,**
**SPECIAL COURT FOR TRIAL**
**OF CASES UNDER SC/ST (POA) ACT**
**TIRUVANNAMALAI.**

**IN THE COURT OF SPECIAL COURT FOR**
**TRIAL OF CASES UNDER SC/ST (POA) ACT, TIRUVANNAMALAI.**
**SPECIAL SESSIONS CASE NO. 17 OF 2025**
**Deposition of Witness for : PW-6 (LW-6)**

| | | |
|---|---|---|
| **Name** | : | திரு.சரவணன் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 31-07-2026**

Accused present.

**முதல் விசாரணை -**

நான் பெரணமல்லூரில் குடியிருக்கிறேன் . மேஸ்திரியாக வேலை செய்கிறேன்,மீன் வியாபரமும் செய்கிறேன் . அன்றைய தினம் தெருவில் என்ன நடந்தது என்று தெரியாது . மறுநாள் போலிசார் வந்தார்கள் . கையெழுத்து போடச்சொன்னார்கள், படிக்க தெரியாது, என்ன விஷயம் நடந்தது என்பது எனக்கு தெரியாது. இந்த வழக்கு தொடர்பாக எனக்கு வேறு எதுவும் தெரியாது . போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி போலிஸ் விசாரணையில் கூறியதில் இருந்து முற்றிலும் மாறுபட்டு சாட்சியம் அளிப்பதால் அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

நான் போலிஸ் விசாரணையில் 16.01.2025 ம் தேதி பொங்கல் பண்டிகை கொண்டாட வேண்டி சின்னதுரையின் மகள் ஷாலினி அவரது குழந்தைகளுடன் சின்னதுரை வீட்டிற்கு வந்ததிருந்தார் என்றும் இரவு 9.00 மணியளவில் ஷாலினியின் குழந்தைகளும், எங்கள் குழந்தைகளும் அந்த தெருவில் உள்ள குழந்தைகளும் சின்னதுரை வீட்டிடம் மியூசிகல் சேர் விளையாடிக்கொண்டிருந்தார்கள் என்றும் , குழந்தைகள் சத்தம்போட்டு விளையாடிக்கொண்டிருந்தபொழுது அதே தெருவில் வசித்துவரும் இந்து வன்னியர் ஜாதியை சேர்ந்த தேவராஜ் மகன் சுரேஷ் என்பவர் தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரிபவர் சின்னதுரை வீட்டிடம் வந்து அலமேலு குடும்பத்தை பார்த்து தெவிடியாங்களா ஏன்டி இவ்வளவு சத்தம் போடுரீங்க லாட்ஜிக்கு போங்கடி நாய்ங்களா என்று அசிங்கமாக திட்டினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை, என்னை யாரும் கேட்கவில்லை . மேலும் நான் போலிசில் வேலை செய்கிறேன், உங்கள் மீது பிராத்தல் கேஸ் போட்டுவிடுவேன் என்று மிரட்டினார் என்றும் அப்போது நானும் எனது மனைவி ரேணு மற்றும் ஜெயா எல்லோரும் சுரேஷை பார்த்து குழந்தைகள் ஜாலியாக விளையாடிக்கொண்டிருக்கிறாகள் இதுக்குபோய் இப்படி அசிங்கமா பேசுறியே போப்பா என்று சொல்லி அனுப்பி வைத்தோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை , நான் காதில் எதுவும் கேட்கவில்லை . பின்பு சுரேஷ் வீட்டிற்கு போய்விட்டார் என்றும் சுரேஷின் மீது நடவடிக்கை எடுக்கும்படி அலமேலு என்பவர் புகார் கொடுத்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் டிஎஸ்பி யாரும் வரவில்லை . போலிஸ் விசாரித்தபொழுது நடந்த சம்பவங்களை சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் இல்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Deposition of Witness recorded in computer under my dictation to Typist in Open court and read over to the witness and acknowledged by him /her as correct.

V SUTHA Digitally signed by V SUTHA Date: 2026.08.01 18:00:06 +0530

**SESSIONS JUDGE,**
**SPECIAL COURT FOR TRIAL**
**OF CASES UNDER SC/ST (POA) ACT**
**TIRUVANNAMALAI.**